# PRESS NOTE

## SUB INSPECTOR OF SURVEY WAS ARRESTED FOR DEMAND AND OBTAINMENT OF BRIBE RS.20,000/- TO REVOKE THE URBAN LAND CEILING

One Thiru E.Sekar, aged 63 S/o Ekambarm, Old No-159, New No-90, Sachidhanantham Street, Kosapet, Chennai-600012 preferred a complaint at Vigilance and Anti-Corruption, Alandur, Chennai-16 on 07.11.2023 at about 0830 hours against the accused Tr. P. Issac S/o Packiyanathan, Sub-Inspector of Survey, O/O the Assistant Commissioner, Urban Land Tax, Poonamalle and Ambathur Zones, Poonamalle, Chennai-600056. He Alleged that the accused demanded Rs.20,000/- as undue advantage on 02.11.2023 at about 0300 p.m. at his office to take action on the application given by the complainant requesting to revoke the Urban land ceiling. As the complainant was unwilling to pay undue advantage to the accused, the complainant lodged a complaint. Based on the complaint a case in DVAC Hqrs Cr.No.7/2023 U/s 7 of prevention of corruption (amendment) Act 2018 was registered on 07.11.2023 and a trap was organized. During the trap the accused accepted Rs.20,000/- from the complainant. The accused was caught red handed at this office situated in No-5, Sannathi Street, O/O the Assistant Commissioner, Urban Land Tax, Poonamalle and Ambathur Zones, Poonamalle, Chennai-600056. The accused was arrested and remanded to the judicial custody. The case is under investigation.

# பத்திரிக்கை செய்தி

## நில உச்சவரம்பினை நீக்கம் செய்வதற்காக ரூ.20,000/- லஞ்சம் கேட்டு பெற்ற நில அளவை சார் ஆய்வாளர் கைது

சென்னை உதவி ஆணையர் நகர்புற நில வரி அலுவலகம், அம்பத்தூர் மற்றும் பூவிருந்தமல்லி மண்டலத்தில் திரு.E.சேகர், S/o.ஏகாம்பரம், கொசப்பேட்டை, சென்னை என்பவர் திருமுல்லைவாயலில் அமைந்துள்ள தன்னுடைய வீட்டின் இடம் நில உச்சவரம்பின் கீழ் அரசு கையகப்படுத்தியுள்ளதால் அதனை நீக்குவதற்கு பூவிருந்தமல்லி சன்னதி தெருவில் அமைந்துள்ள நகர்புற நிலவரி அலுவலகத்திற்கு 04.10.2023 அன்று சென்று சார் ஆய்வாளர் நில அளவை திரு.ஐசக் என்பவரிடம் மனுவை கொடுத்துள்ளார், மேலும் மனுதாரர் 02.11.2023 ஆம் தேதி மாலை சுமார் 03.00 மணியளவில் சார் ஆய்வாளர் நில அளவை திரு.ஐசக் அவர்களை சந்தித்து நிலுவையில் இருந்த தனது மனு குறித்து கேட்டபோது, அவரது மனுவினை பரிசீலித்து நடவடிக்கை எடுப்பதற்கு முதலில் ரூ.40,000/- லஞ்சமாக கேட்டுள்ளார். அதற்கு மனுதாரர் நான் மாத ஓய்வூதியம் பெற்று வருவதால் இந்த தொகை கொடுக்க இயலாது என்று கூறியுள்ளார், அதற்கு திரு.ஐசக் ரூ.20,000/- கொடுத்தால் தான் உங்கள் மனுவின் மீது நடவடிக்கை எடுப்பேன் என்று கண்டிப்பாக கூறியுள்ளார். மனுதாரருக்கு லஞ்சம் கொடுக்க விருப்பம் இல்லாததால் சென்னை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறை அலுவலகத்தில் கொடுத்த புகாரின் அடிப்படையில் வழக்கு பதிவு செய்யப்பட்டு பொறிவைத்து பிடிக்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. இந்த நடவடிக்கையின் போது இன்று 07.11.2023 ஆம் தேதி சார் ஆய்வாளர் நில அளவை திரு.ஐசக் என்பவர் தன்னுடைய அலுவலகத்தில் வைத்து மனுதாரரிடமிருந்து லஞ்ச பணம் ரூ.20,000/- ஐ பெற்றபோது கையும் களவுமாக பிடிபட்டார். 07.11.2023 ஆம் தேதி மாலை ஐசக் கைது செய்யப்பட்டு நீதிமன்ற காவலுக்கு அனுப்பப்பட்டார். தொடர்ந்து இந்த வழக்கில் விசாரணை நடைபெற்று வருகிறது.